முச்சந்தி முரளி



"பொறுப்பேற்கமாட்டம் எண்டுறதெல்லாம் பொறுப்பில்லாதவையின்ர வேலை கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 289

செவ்வாய்க்கிழமை
10 செப்ரெம்பர் 2024

ஆவணி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# பொறுப்புக்கூறலின்மை இலங்கையில் நீடிப்பு!

## மனித உரிமைகள் பேரவையில் சர்வதேசம் சுட்டிக்காட்டு

ஜெனிவா, செப். 10

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில், இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகள் நேற்றுச் சுட்டிக்காட்டியுள்ளன.

பொறுப்புக்கூறல், மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தல் மற்றும்

11





## சஜித்தின் மேடையில் இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, செப். 10

மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

கண்டியில்

11

பொறுப்புக்கூறல் தொடர்பான

# தீர்மானங்களை ஏற்கமாட்டோம்!

## இலங்கை நேற்று அறிவிப்பு

**ஜெனிவா, செப்ரெம்பர் 10**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், பொறுப்புக்கூறல் உட்பட நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானங்களையும் ஏற்கப்போவதில்லை என்று இலங்கை அறிவித்துள்ளது.**

11

## மஹிந்த, நாமலுக்கு உயிர் அச்சுறுத்தல்

### பாதுகாப்பைப் பலப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, செப். 10

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் உயிரச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

11



ஐரோப்பிய ஒன்றியத்தின்

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆளுநருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 10

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

11

## சிவில் சமூகத்துக்கு தொடர் துன்பங்கள்!

ஜெனீவா, செப். 10

இலங்கையில் சிவில் சமூகங்களின் மீது கண்காணிப்பும் துன்புறுத்தலும் தொடர்கின்றது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

11

அல்லைப்பிட்டியில்

## அடிகாயங்களுடன் சடலமொன்று மீட்பு

யாழ்ப்பாணம், செப். 10

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது-43) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு

11

## அங்கஜனின் தந்தையார் நெல்லியடியில் அடாவடி

### பூட்டை உடைத்த இளைஞர் குழுவினர்

யாழ்ப்பாணம், செப். 10

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் தந்தையார் இராமநாதன், நெல்லியடியிலுள்ள விளையாட்டு மைதானத்தை தன்னிச்சையாகப் பூட்டிய

11

## சட்டத்தரணியொருவர் சடலமாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், செப். 10

தனிமையில் இருந்த சட்டத்தரணி ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கனகசபாபதி நவனாதன் (வயது-86) என்ற சட்டத்தரணியே திருநெல்வேலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இவ்வாறு சடலமாக மீட்கப்

11

ஜனாதிபதித் தேர்தல்

## சகல பாடசாலைகளுக்கும் 20 ஆம் திகதி விடுமுறை!

கொழும்பு, செப். 10

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றின் மெத்தனத்தால் வீணாகிய 3 லட்சம் வாக்குகள்!

*தேர்தல் கண்காணிப்பாளர்கள் விசனம்*

கொழும்பு, செப்.10

**வெளிநாட்டுப் பணியாளர்கள் மற்றும் கைதிகளின் வாக்களிப்புக்குத் தேவையான சட்டம் இயற்றப்படாமையால் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் வாக்களிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இதற்கு சட்டமன்ற அமைப்பான நாடாளுமன்றமே நேரடியாகப் பொறுப்பேற்கவேண்டும் என்றும், இது நாட்டின் கணிசமான சதவீத மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றது என்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் கைதிகளின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்டத்தில் நாடாளுமன்றமோ அல்லது அதிகாரிகளோ அக்கறை காட்டவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்புக்குள் நடைபெறும் எனவும் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் எந்த நடவடிக்கையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# நாடாளுமன்ற ஆக்கிரமிப்பு தவறான முன்னுதாரணம்!

*வசந்த முதலிகே தெரிவிப்பு*



கொழும்பு, செப்.10

அரகலயவின்போது நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சி தவறான அரசியல் தீர்மானமாகும். அதை நாம் அனுமதிக்கமாட்டோம் என்று மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவருமான வசந்த முதலிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

அரகலய காலத்தில் பல போராட்டக்காரர்கள் இருந்தனர். காலிமுகத்திடல் செயற்பாட்டுக்குழு என ஒன்று இருந்தது. அந்தக் குழுவே முடிவுகளை எடுத்தது. நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவது தொடர்பில் இக்குழுவில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

ஒரு சிலரின் தேவைக்காக நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கலாம். அது காலிமுகத்திடல் செயற்பாட்டுக்குழுவின் நடவடிக்கை அல்ல. அது அரசியல் ரீதியில் தவறானதொரு முடிவாகும். அது கூட்டு முடிவு இல்லை என்பதால் நாம் உடன்படவில்லை.

வன்முறையை என்றும் நாம் எதிர்க்கின்றோம். ஏப்ரல் 9 நாம் போராட்டக் களத்துக்கு வந்தோம். மே 9 ஆம் திகதிவரை எதுவும் நடக்கவில்லை. மஹிந்த ராஜபக்ச தரப்புதான் வன்முறையை தூண்டியது. அதற்குத்தான் மக்கள் தரப்பில் இருந்து பதில் வழங்கப்பட்டது - என்றார். (எ-44)

# காணி, பொலிஸ் அதிகாரம் வழங்குவதற்குத் தயாரில்லை

*மீண்டும் நாமல் தெரிவிப்பு*



13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச மீண்டும் தெரிவித்துள்ளார். அளுத்கம பஸ் நிலையத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையை உலகளாவிய போக்குவரத்து மையமாக மாற்றுதல், உலகளாவிய போக்குவரத்துத் துறையில் சேவை செய்யும் இடம். இரத்தினக்கல் தொழில்துறைக்கு எளிமையான வரிக் கொள்கை மற்றும் எளிமையான முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கை இரத்தினக்கல் தொழிலில் உலகின் மையமாக மாற்றப்படும். 13 அரசியலமைப்புத் திருத்தம் இனவாதம் அல்ல. நாங்கள் வேறொரு நாட்டையோ அல்லது தூதரகத்தையோ திருப்திப்படுத்துவதற்காக கொள்கைகளை உருவாக்கவில்லை, மாறாக நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்காக உருவாக்கியுள்ளோம் என்றார். (எ-இ)

# ரணில் பக்கமே தொழிலாளர் காங்கிரஸ்

கொழும்பு, செப்.10

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சஜித் பக்கம் சாயவுள்ளது என வெளியாகும் தகவல்களை இ.தொ.கா.வின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் நிராகரித்துள்ளார். காங்கிரஸ் முடிவொன்றை எடுத்துவிட்டால் அதில் இருந்து கடைசிவரை பின்வாங்காது என்று அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியுடன் கடந்த 30 ஆம் திகதி இ.தொ.கா. புரிந்து ணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடவிருந்தது. எனினும், அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. இறுதி நேரத்தில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்காகவே இ.தொ.கா. இவ்வாறு செயற்பட்டது என கருத்துகள் வெளியாகியுள்ளன. ஆயினும் இ.தொ.கா. தலைவர் அதை நிராகரித்துள்ளார். (எ-44)

# 13ஆவது திருத்தத்தால் நாடு மீண்டெழுமா?

*கேள்வி எழுப்புகிறார் விமல்*

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் நாட்டு பொருளாதாரம் மீண்டெழுந்துவிடுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச. ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டத்தின் ஆட்சி நடைபெறாத நாடாக பங்களாதேஷ் மாறியுள்ளது. இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலைமையை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றனர். அதனால்தான் மேற்குலகத்துக்கு தேவையான யோசனைகள் மூன்று தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த மூவரில் யார் வெற்றிபெற்றாலும் தமது நோக்கம் நிறைவேறும் என மேற்குலகம் நம்புகின்றது. உள்ளாடைகளில் ஓட்டை இருப்பதுதான் தேசிய பிரச்சினையா? இது பற்றிதான் தற்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கதைக்கின்றனர். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குரிய வழிமுறைகள் பற்றி கதைக்கப்படாதது ஏன்? சர்வஜன கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமே இதற்குரிய தீர்வு உள்ளது. உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவுக்கு உயிர் கொடுக்க வேண்டுமெனில், படையினரை பலிக்கடாவாக்க வேண்டுமெனில் மாற்று தரப்பினருக்கு வாக்களியுங்கள். படையினர் உயிர்த் தியாகம் செய்து காத்த நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில் எமது அணி வேட்பாளருக்கு வாக்களியுங்கள். வடக்குக்கு சென்று 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் எனக் கூறுபவர்களுக்கு இந்நாட்டை கட்டியெழுப்ப முடியுமா? 13ஐ அமுல்படுத்துவதால் பொருளாதாரம் மீண்டுவிடுமா? பொலிஸ் அதிகாரம் வழங்குவதால் பொருளாதாரம் எழுந்துவிடுமா? விழுந்த பொருளாதாரத்துக்கு உயிர் வருமா? எனவே, காட்டிக்கொடுப்புகளை நிறுத்தவேண்டும்-என்றார். (எ-44)

# தோல்வியை ஏற்றார் ரணில் நாட்டைக் கொளுத்தும் அநுர

*வாக்குகளை வீணாக்கவேண்டாம் என்கிறார் சஜித்*

தோல்வியை ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம். அநுரவுக்கு வாக்களித்து கொளுத்துகின்ற கலாசாரத்தை ஆதரிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த பேரணி வெலிமடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசியக் கடனை மறுசீரமைப்புச் செய்கின்ற போது EPF, ETF பணத்தைத் திருடிய அரசாங்கத்தின் சிறந்த கையாளாக ஜே.வி.பி.யின் அநுரகுமார திஸாநாயக்க காணப்படுகின்றார். நாட்டை வங்குரோத்தடையச் செய்த ராஜபக்சக்களுக்காக நான் ஒருபோதும் கூலிக்கு கோஷம் போட்டதில்லை. பதாகைகளை ஒட்டவில்லை. தலதா மாளிகையில் ராஜபக்சக்களுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனால் அநுர அவற்றைச் செய்திருக்கின்றார். நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய சிறந்த குழு எம்மோடு இருக்கின்றது. ஜனாதிபதிகள் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். நான் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் பெறாத ஜனாதிபதியாக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் - என்றார். (எ-25)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3.3 மில். வாக்காளர் அட்டை ஒரே நாளில் விநியோகம்

கொழும்பு, செப்.10

**ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வரும்நிலையில் 51 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.**

நேற்றுமுன்தினம் மட்டும் 3.3 மில்லியன் வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தபால்மா அதிபர் பி.சத்குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது-

இன்று (நேற்று) வரை மொத்தம் 8.7 மில்லியன் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 14ஆம் திகதிவரை விநியோகிக்கப்படவுள்ளது.

14ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டைகளை பெறாத நபர்கள் தங்களது அடையாளத்தை உள்ளூர் அஞ்சல் விநியோக அலுவலகத்தில் சரி பார்த்துப் பெறலாம் - என்றார். (எ-இ)



## ஜெனீவாக் கூட்டத் தொடருக்குச் சென்ற காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்!

கொழும்பு, செப்.10

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்காக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்தநடராஜா தலைமையிலான குழு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஜெனிவா புறப்பட்டு சென்றுள்ளது (எ-25,27)

## சனிக்கிழமையும் வாக்காளர் அட்டை விநியோகம்

கொழும்பு, செப்.10

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய விசேட தினமாக எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-இ)

## விதிமுறையை மீறிய பிரமித்த பண்டார!

கொழும்பு, செப்.10



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தேர்தல் விதிமுறைகளை மீறிப் பரப்புரையில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தம்புள்ளயில் தேர்தல் விதிமுறைகளை மீறி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் தலையிட்டு அதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பிரமித்த பண்டார தென்னக்கோன் மற்றும் முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோர் இணைந்துரணில்விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

இந்த நடவடிக்கைகளில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இணைந்திருந்தனர். (எ-இ)

## நாடு திரும்பாவிட்டால் பதவிகள் பறிபோகும்!

கொழும்பு, செப்.10

நீண்டகால விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள அரச உத்தியோகத்தர்கள் உரிய காலப்பகுதியில் நாடு திரும்பாவிட்டால் அவர்களது பதவிகள் வறிதாக்கப்படும் என பொதுநிர்வாக அமைச்சின் செயலர் யசரத்ன அறிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக் காலத்தில் விசேட விடுமுறையை பெற்றவர்கள் மீண்டும் பணிக்கு திரும்பவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களது பதவிகள் வறிதாக்கப்படுவது தொடர்பில் திணைக்களத் தலைவர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், அமைச்சு செயலாளர்கள் அனைவருக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இவர்களுக்கு எதிராக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (எ-25,6)

## 90 வீதமானோர் வாக்களிப்பு

கொழும்பு, செப்.10

கொழும்பு மாவட்டத்தில் 90 வீதத்துக்கும் அதிகமானோர் தபால் மூல வாக்களித்துள்ளனர் என்றும், எதுவித தேர்தல் மீறல்களும் பதிவாகவில்லை எனவும் கொழும்பு மாவட்ட செயலாளர் பிரசன்ன கினிகே தெரிவித்தார்.

பயன்படுத்தப்பட்ட தபால் வாக்குகள் எந்த வேட்பாளருக்கு எத்தனை வீதம் வழங்கப்பட்டுள்ளது என்பதை யாராலும் கூறமுடியாது.

அந்தந்த அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் மூலம் சமூக வலைத்தளங்களில் தமக்கு தபால் வாக்குகளில் இலாபங்கள் உண்டு எனத் தெரிவிக்கப்படும் கூற்றுக்களில் உண்மைத் தன்மை இல்லை.

இவ்வாறான செயற்பாடுகளால் தெளிவான தேர்தல் தவறான விடயங்கள் சேர்வதாகவும் அதற்கு எதிராக தண்டனைகள் வழங்க முடியும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (எ-இ)



# தினம் தெரியுமோ?

சகுனியாட்டங்கள் அரசியலுக்குப் புதிசில்லைத் தானே. அதிலையும் இப்ப வீட்டுக்கட்சியில உந்தச் சகுனி வேலையள் செய்யிறதுக்கெண்டே ஒரு கூட்டம் வேலைமினக்கெட்டு அலையினம். இந்தமுறை அந்தக் கட்சியின்ர மத்தியகுழுக் கூட்டத்தில ரெலிபோன் வேட்பாளருக்கு ஜனாதிபதித் தேர்தலில சப்போர்ட் எண்டு அறிவிச்சது கூட உந்தச் சகுனியாட்டத்தின்ர ஒரு பகுதிதானோ எண்டு சனங்கள் சந்தேகப்படுகினம். ஏனெண்டால் வீட்டுக்கட்சியை கோர்ட்டில ஏத்தி அதை முந்தின மாதிரி இயங்கவிடாமல் பண்ணினதால கட்சிக்காரர்கள் சோர்ந்து போட்டினம். முக்கியமா புதிசா தலைவரா தெரிவானவரின்ர பக்கம் கடும் சோர்வு. இப்பிடி ஒரு தலைமைப்பதவியை எடுக்கிறதை விட சுயேச்சையா நிக்கலாம் எண்டு அந்தப் பக்கமா கனபேர் முணுமுணுக்கத் தொடங்கிட்டினம். சுயேச்சையா நிண்டாலும் வெல்லக்கூடியளவுக்கு கிளிநொச்சி எம்.பி.யிட்ட வாக்குப் பலம் இருக்கு. அதால அவர் வேற சின்னத்தில எலக்சன் கேட்டாலும் வெல்லுறது உறுதி. அதால இப்பிடி வீட்டுக்குள்ள முடங்கிக் கிடக்காமல் அவரை வெளியில வந்து பவரைக் காட்டச் சொல்லி அவரின்ர ஆதரவாளர்கள் ஒரே நச்சரிப்பாம்.

இந்த விசயம் அவரின்ர எதிர்க்கன்னைக்கும் தெரியும். அதால இதையே சாட்டா வைச்சு ஆளை வீட்டை விட்டு கலைச்சால், வீட்டின்ர திறப்பு நோகாமல் தங்களுக்கு கிடைக்கும் எண்டு அவையள் நினைக்கினம். அப்பிடி கிளிநொச்சி எம்.பி. வீட்டை விட்டுப் போனால், கட்சிக்கு அந்த மாவட்டத்தில பெரிசா வாக்குகள் விழாமல் போடும். இதுக்கு இன்னொரு ஏற்பாட்டை அந்தச் சகுனியாட்ட ரீம் செய்து கொண்டு வருகினமாம். வீணைச் சத்தம் பிடிக்காமல் பிரிஞ்சுபோய், இப்ப கேடயத்தில கிளிநொச்சியில நிக்கிறவரை வீட்டுக்குள்ள கொண்டுவாறதுதான் அந்தத் திட்டம். ஏற்கனவே சகுனியாட்ட ரீமில இருந்த சிலர் இப்ப கேடயத்துக்குள்ள தான் ஒதுங்கி நிக்கினம். அவை மூலமா தூது விட்டு, கேடயத்தை கொண்டு வந்தால் கிளிநொச்சி எம்.பி.க்கு எதிரா வாக்குகளை வீட்டுக்குள்ள குவிக்கலாம் எண்டு சகுனியாட்ட ரீம் நினைக்குதாம். அதால தான் இப்ப 'வீட்டுக்கட்சி ரெலிபோனுக்கே சப்போர்ட்' எண்டு சகுனியாட்டக்காரர் அறிவிச்ச பிறகு, கேடயக்காரரும் அதே ரெலிபோனுக்கு சப்போர்ட் பண்ணினவையாம். இப்பிடி ரண்டு தரப்பும் 'மனமொத்து' நடக்கிறதால கெதியில கேடயம் வீட்டுக்குள்ள வந்திடும் எண்டு விசயம் அறிஞ்சவை சொல்லுகினம்.

ஆனால் இப்பிடி எடுத்தம், கவிழ்த்தம் எண்ட மாதிரி தங்கட லாபத்துக்காக கேடயத்தை வீட்டுக்குள்ள கொண்டுவந்தால்,ஏற்கனவே கிடைக்கிற கொஞ்ச நஞ்ச வாக்கும் வீட்டுக்கட்சிக்கு இல்லாமல் போடும். என்னதான் இப்ப அவை கேடயத்தை வைச்சிருந்தாலும், முந்தியொருகாலத்தில அவை வீணையை வைச்சிருந்த ஆக்கள் தானே. அதால அவையை இப்பவும் வீணைக்காரர் எண்டுதான் சனங்கள் பாக்கினம். கேடயம் வைச்சிருக்கிறவர் கடைசிச் சண்டை நடக்கேக்க சொன்னதுகளையும், செய்ததையும் சனங்கள் மறக்கேலை. அதால வீட்டுக்குள்ள கேடயத்தைக் கொண்டுவந்து இருக்கிற வாக்குகளும் இல்லாமல் போய் , வீட்டுக்காரர் எல்லாரும் நடுத்தெருவில நிண்டாலும் அதிசயமில்லைப் பாருங்கோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்கழிவுகளால் பொதுமக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.10
கைதடி - கோப்பாய் பாலத்துக்கு அருகில் கோழிக் கழிவுகள் கொட்டப்படுவதால், வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேஷம்:** தாய் மாமன் வகையில் எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளின் காரணமாக கையிருப்பு குறையும்.

**ரிஷபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வ வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியாகி முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் - மனைவிக் கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். இன்று உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும் என்பதால், கவனமாக இருக்கவும்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

# குளவிக்கூட்டை அகற்றுமாறு வன்னேரி மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி , செப்.10
**கிளிநொச்சி, வன்னேரிக்குளம் ஐயனார்புர பனைமரமொன்றில் பெரும் குளவிக்கூடு இருப்பதன் காரணமாக அச்சத்துடன் நடமாட வேண்டியுள்ளது என்று அந்தப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் குளவிக் கூடு உள்ள மரத்தில் இருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் வசிக்கும் நூறுக்கும் மேற்பட்ட முதியோர்களும், 100 மீற்றர் தூரத்தில் உள்ள ஐயனார்புரம் பாடசாலையின் மாணவர்களும் ஆசிரியர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்காகக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. இக்குளவிக் கூட்டை அகற்றுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25,13)

## மானிய உரப்பதிவும் நெற்செய்கைக் கூட்டமும்

யாழ்ப்பாணம், செப்.10
தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கைக்கான மானிய உரப் பதிவும், காலபோக நெற்செய்கைக் கூட்டமும் மறவன்புலவு பொதுநோக்கு மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கையாளர்கள் தமது தேசிய அ. அட்டை, 2024 ஆம் ஆண்டுக்குரிய ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் புகைப்படப் பிரதி ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் தெரிவித்தார். (ச-45-9)

## மூக்குக்கண்ணாடி வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.10
மீள்குடியேற்ற உதவித்திட்ட நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் நாளை புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெறவுள்ளது என அலகா அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் வேலாயுதம் சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். நிகழ்வில் வட மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், மருத்துவர்களான கேதீஸ்வரன், கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் எம்.மலரவன், கண் மருத்துவ கல்விச் செயலாளர் நிரஞ்சன், சங்கானை சுகாதாரப் பணிமனை மருத்துவர் யதுநானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-25)

## கசிப்பு உற்பத்தி இளைஞன் கைது

யாழ்ப்பாணம், செப்.10
கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில் 24 வயது இளைஞன் கோப்பாய் மத்தியில் உள்ள வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், 10 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சந்தேகநபருக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-45-23)

## வேளாங்கன்னி மாதா ஆலயக் கொடியேற்றம்

கிளிநொச்சி, செப்.10
முகமாலை புனித அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயத் திருநாள் நாளைமறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும், திருப்பலி பூஜையும் இடம்பெற்று, எதிர்வரும் 15ஆம் திகதி காலை திருநாள் திருப்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது. திருநாள் ஆராதனைகள் பளைப் பங்குத் தந்தை தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-45-9)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.10
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் நித்திய பாபுதரன் 'நற்றுணையாவது நமசிவாயவே' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-ரி)

## நல்லூரில் தவறவிடப்பட்ட பொருள்களைப் பெறலாம்

யாழ்ப்பாணம், செப்.10
நடைபெற்று முடிந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழாக்காலத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்டு இதுவரை உரிமைகோரி பெற்றுக்கொள்ளப்படாத பொருள்கள் மாநகரசபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (சிறு கைச்சங்கிலி 1, மோதிரம்(பெண்) 1, பணப்பைகள் 9, மணிக்கூடுகள் 18, தேசிய அடையாள அட்டை 4, சாரதி அனுமதிப்பத்திரம் 4, வங்கி அட்டைகள் 4, திறப்புகள் 39) இவற்றை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களை உறுதிப்படுத்தி மாநகரசபை நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் 11ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (எ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## அவகாசம் படுமோசம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகியிருக்கின்றது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், பொறுப்புக்கூறல் மற்றும் மீளநிகழாமையை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இரு வருட அவகாசம் கடந்த மாதத்துடன் முடிவுற்றிருந்த நிலையில், இம்முறை கூட்டத் தொடரின் ஆரம்ப நாள் நிகழ்வுகளில் ஒன்றாக இலங்கை தொடர்பிலும் விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றது.

நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை இன்னும் நீண்டதூரம் பயணிக்கவேண்டும் என்றும், பொறுப்புக்கூறலுக்காக அனைத்துத்தரப்பையும் உள்ளடக்கிய பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அத்துடன் தண்டனை விலக்களிக்கப்படும் போக்கை இலங்கை கைவிட வேண்டும் என்றும் நேற்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் வலியுறுத்தல்கள் இலங்கையை கிஞ்சித்தும் அசைக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிராகரிப்பதாகவும், இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வெளிப்புற ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறைகளை திட்டவட்டமாக மறுப்பதாகவும் இலங்கை தன் நிலைப்பாட்டை நேற்று மீண்டும் ஒருதடவை இறுக்கமாகப் பதிவு செய்திருக்கின்றது.

57ஆவது கூட்டத்தொடரின் இலங்கை தொடர்பான விவாதத்தை மிகத்திடமாகவும் சர்வதேசப் பலத்துடனும் எதிர்கொள்வது என்ற முடிவுக்கு இலங்கை வந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள். 2022ஆம் ஆண்டு கடும் நிபந்தனைகளுடன் இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டபோது சர்வதேசத்தில் தனக்கேற்ற மாற்று ஆதரவுத் தளமொன்றை ரணில் ஏற்படுத்த விளைந்தார். இவ்வாறாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளைத் துடைத்தெறிவதற்கு இலங்கை எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அத்தனையும் தோல்வியே கண்டது. இதுவரை இலங்கையை பொறுப்புக்கூறச் செய்வதற்கு சர்வதேசத்தால் முடியாவிட்டாலும், மறுமுனையில் தீர்மானங்கள் நீர்த்துப்போகச் செய்யப்படாமல் உயிர்ப்புடன் இருக்கும் பின்னணியில் இதை இலங்கையின் தோல்வி அல்லது பின்னடைவு என்றும்கூட கொள்ள முடிந்தது. ஆனால், நேற்றைய நாளில் இலங்கை வழங்கியிருக்கும் பதில்களும் இலங்கைக்கு எதிராகக் கொடுக்கப்பட்டிருக்கும் குறை அழுத்தங்களும் தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் இருள் கௌவிக் கொள்வதன் எதிரொலிப்பே.

தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்பார்கள். நீதி எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவே செய்கின்றது. இறுதிப்போர் முடிவுற்று அடுத்தடுத்த ஆண்டுகளில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் தமிழர்கள் பெரும் கவனக்குவிவைச் செலுத்திவந்தனர். ஆனால், இப்போதெல்லாம் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் தமிழர்கள் பெரிதாக நாட்டம் கொள்வதில்லை. தமிழர்களின் இந்த 'நாட்டமற்ற நிலை' ஐக்கிய நாடுகள் சபையின் பெருந்தோல்வி. ஐக்கிய நாடுகள் சபை தன் நிலைப்பாட்டில் உறுதியாக நின்றிருந்தால், அழுத்தத்தை உரிய வகையில் கொடுத்திருந்தால் இன்று தப்பித்தோடும் வாய்ப்பை கொழும்பு தேடிக் கொண்டிருக்கச் சந்தர்ப்பமில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், இந்த வருடத்திய அமர்வாவது தமிழர்களின் மனங்களில் 'நீதிக்கான நெடும் பயணத்தில் ஓர் ஆற்றுப்படுத்தலை வழங்குமா?' என்பதே ஈழத் தமிழர்களின் மனங்களில் தற்போதுள்ள எதிர்பார்ப்பு.



## பரப்புரை நடவடிக்கைக்கு பல்வேறு கட்டுப்பாடுகள்!

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு



**கொழும்பு, செப்.10**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பரப்புரைக்காகச் செல்லும்போது, 5 பேர் மாத்திரமே வீடுகளுக்குச் செல்லமுடியம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

வீடுகளுக்கு பேரணியாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க சட்டம் இடமளிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வாகனங்களில் மட்டுமே ஸ்ரிக்கர்களை ஒட்ட முடியும் என்றும், வேட்பாளரின் வாகனத்தை தவிர ஏனைய அனைத்து வாகனங்களிலும் ஸ்ரிக்கர் அல்லது வேறு பிரசாரங்களை காட்சிப்படுத்துவது சட்டவிரோதமானது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## வாக்களிப்போருக்கு தற்காலிக அ.அட்டை

கொழும்பு, செப்.10

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளமுடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. தங்கள் பகுதியில் உள்ள கிராம அலுவலர் அல்லது தோட்டக் கண்காணிப்பாளர் மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## தேங்காய் விலையில் மாற்றம் ஏற்படாது!

கொழும்பு, செப்.10

தேங்காய்க்குச் சந்தையில் தற்போது நிலவும் விலை இந்த ஆண்டு இறுதிவரை நீடிக்கும் என்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தேங்காய் ஏற்றுமதிக்கான தேவை அதிகரித்துள்ளதால் தேங்காய் ஒன்றின் விலை தற்போது 120 ரூபாவாகக் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## விபத்தை ஏற்படுத்திய கப்பல் தடுத்துவைப்பு!

காலி கடற்பகுதியில் பல நாள் மீன்பிடிக் கப்பல் மோதியதில் மூன்று மீனவர்கள் காணாமல் போன சம்பவத்துடன் தொடர்புடைய கப்பல் கைப்பற்றப்பட்டு திருகோணமலை துறைமுகத் தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது. கப்பல் மாலுமியிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள நிலையில், திருகோணமலை துறைமுகத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக வரும்வரை தனது கப்பல் மீன்பிடிக் கப்பலுடன் மோதியமை தனக்குத் தெரியாது என மாலுமி தெரிவித்துள்ளார். லிபியாவில் இருந்து பங்களாதேஷ் நோக்கி உரங்களை ஏற்றிச் சென்ற கப்பலே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)



## மழை அதிகரிக்கும்

கொழும்பு, செப்.10

நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் சில தினங்களில் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் இன்று 50 மில்லி மீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஊவா மாகாணம், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### நாளை

11.09.2024

புதன்கிழமை - ஆவணி - 26

சுபநேரம் : 04.33 - 06.03

ராகுகாலம் : 12.03 - 01.33

### நாளொரு நல்வார்த்தை

ஒரு முறை வந்தால் அது கனவு
இரு முறை வந்தால் அது ஆசை.
பல முறை வந்தால் அது இலட்சியம்...!

- எ. பி. ஜே. அப்துல் கலாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித், அநுர, ரணிலுக்கு வாக்களிப்போர் துரோகிகள்

கெவிந்து குமாரதுங்க கூறுகின்றார்

கொழும்பு, செப்.10

அதிகாரப்பகிர்வு மற்றும் படையினருக்கு எதிரான நடவடிக்கை என்பவற்றுக்கு உறுதியளித்துள்ள சஜித், அநுர, ரணில் ஆகியோருக்கு வாக்களிப்பவர்கள் நாட்டை நேசிக்கும் மக்களாக இருக்க முடியாது என்று சர்வஜன அதிகாரத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாதுங்க தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் படையினர் தொடர்பில் மாற்றங்கள் எதுவும் இல்லை. படையினர் எண்ணிக்கை குறைக்கப்படும் என்ற உறுதிமொழி சஜித்தின் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்ட வரைவை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார். இது இராணுவத்துக்கு எதிராக சாட்சி திரட்டுவதற்கான சட்ட வரைவாகும். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்வேளை எதற்காக அவசரமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்? இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஜே.வி.பி.யினர் வாய்திறக்க வில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராணுவப் பாதுகாப்புடன் ஹோட்டல்களில் வைக்கப்பட்டே அன்று இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிலையில் மாகாண சபைகளை பலப்படுத்தும் புதிய அரசமைப்பு ஈராண்டுகளுக்குள் கொண்டுவரப்படும் எனவும், அதுவரை 13 முழுமையாக அமுல்படுத்தப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சியின்போது சூழ்ச்சியின் ஓர் அங்கமாகக் கொண்டுவரப்பட்டபோதிலும், தேசியவாத அமைப்புகளின் தலையீட்டால் நடைமுறைப்படுத்த முடியாமல்போன ஒருமித்த நாடு அரசமைப்பு முழுமைப்படுத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளது. இவர்களுக்கு வாக்களிப்பவர்கள் நாட்டை நேசிக்கும் மக்களாக இருக்க முடியாது – என்றார். (ஏ–44)

# விளையாட்டுத்துறைக்கு முறையான பொறிமுறை

அநுர தெரிவிப்பு



விளையாட்டுத்துறையில் வெற்றி பெறுவதற்காக முறையான பொறிமுறைமை அவசியமாகும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பதக்கத்தையும், தேசியமட்டத்தில் உள்வாங்கப்படுதல் என்ற அடிப்படையில் மாத்திரம் இலங்கையின் விளையாட்டு முறைமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், உலகளாவிய ரீதியில் இதற்கான உரிய முறைமைகள் இல்லை. இவ்வாறானதொரு கலாசாரம் இலங்கையிடமும் ஆரம்பக் காலங்களிலிருந்தது. இவற்றை நிவர்த்திப்பதற்காக விளையாட்டுத்துறையில் வெற்றி பெறுவதற்காக முறையான பொறி முறைமையைத் தேசிய மக்கள் சக்தி அறிமுகப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# சீன குற்றப் புலனாய்வுக்குழு இலங்கைக்கு வருகை

கொழும்பு, செப்.10

சீன குற்றப்புலனாய்வுப் பிரிவின் பத்து அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இணையவழி நிதி மோசடிகளின் அதிகரிப்புக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தக் குழு வருகை தந்துள்ளது. கடந்த ஜூன் வரையிலான காலப் பகுதி வரையில் இலங்கையில் இணையவழித் தளங்கள் மூலம் நிதி மோசடி செய்தமை குறித்து சீன மற்றும் இந்திய பிரஜைகள் குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

அக்குழுவில் 31 சீன பிரஜைகள் உட்பட மொத்தம் 137 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு சந்தேகநபர்கள் சிலரிடமிருந்து 158 கையடக்கத் தொலைபேசிகள் 16 மடிக் கணினிகள் மற்றும் 60 சாதாரண கணினிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை காணிகள் 2024ம் ஆண்டிற்கான காலபோக செய்கைக்கு மட்டும் குத்தகைக்கு விடப்பட உள்ளது.

மேற்படி எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழும், புதுமுறிப்பு குளத்தின் கீழும் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பின்வரும் கமக்கார அமைப்புகளுக்குள் உள்ள எமது பயிர்ச்செய்கை காணிகள் 2024ம் ஆண்டு காலபோக செய்கைக்கு மட்டும் எதிர்வரும் 14.09.2024 அன்று காலை 9.00 மணிக்கு சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் ஜெயந்திநகரிலும் பிற்பகல் 03 மணிக்கு கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவலக அருகாமையிலும் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாய பெருமக்களாகிய தாங்கள் ஏக்கர் ஒன்றிற்கு தங்களால் வழங்கக் கூடிய ஆகக் கூடிய தொகையினைக் கோரி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு :-

பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள தெரிவுசெய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத் தொகையினை முழுமையாக முன்குத்தகையாக அன்றைய தினமே செலுத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். அத்தோடு ஏல விற்பனை தொடர்பில் எமது ஏல விற்பனைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

| இல | காணி விபரம் | அளவு | ஏல விற்பனை நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | உருத்திரபுரம் 09ம் வாய்க்கால் கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 04 ஏக்கர் | மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் | காலை 09.00AM |
| 02 | புதுமுறிப்பு சிவநகர் கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 10 ஏக்கர் | | |
| 1 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் நாகபூசணி வயல் | 20 ஏக்கர் | கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவலகம் அருகாமை | பி.ப 3.00PM |
| 2 | முரசுமோட்டை கமக்கார அமைப்பின் கீழ் முரசுமோட்டை வயல் | 26 ஏக்கர் | | |
| 3 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் உலாந்தா கமம் | 26 ஏக்கர் | | |
| 4 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 10 ஏக்கர் | | |

தொடர்பு முகவரி :-
ச.மோகனபவன்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம்
077 324 0950
0214923118


# கணவன் கொலை மனைவி கைது

கொழும்பு, செப்.10

தெல்தெனிய-உடகம்மெத்த பகுதியில் கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்டதகராறு காரணமாக மனைவி கணவனை இரும்புக் கம்பியால் தாக்கிகொலை செய்துள்ளதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது. உயிரிழந்தவர் உடகம்மெத்த, கொமகொட பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தெல்தெனியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பரீட்சை நிலையங்களுக்கு அருகில் தேர்தல் பரப்புரைகள் வேண்டாம்!

தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, செப்.10

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளுக்கு அருகில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களையோ, பரப்புரைகளையோ நடத்த வேண்டாமெனவும், ஒலிபெருக்கிகளை உபயோகிக்க வேண்டாமெனவும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஏ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆபத்தான பாதையில் அச்சத்துடன் பயணம்

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், செப்.10
அராலி கிழக்கு ஐயனார் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் பாலம் ஒன்றின் மேலே காணப்படுகின்ற தகரம் உக்கிய நிலையில் காணப்படுவதால் அச்சத்துடனே பயணம் செய்ய வேண்டியுள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர் சாதாரண மோட்டார் வாகனம் பயணிக்கின்றபோது கூட அச்சநிலை காணப்படுவதாகவும் கனரக வாகனங்களின் பயணம் ஆபத்தான நிலையை உருவாக்கும்.
எனவே மழை காலம் ஆரம்பிக்க முன்னர் இந்தப் பாலத்தைப் புனரமைத்துத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-45-125)

**மணமகள் தேவை**

யாழ் இந்து 1977ம் ஆண்டு உத்திரட்டாதி மீனம் கி.பா 17 1/4 சொந்தமாக தொழில் செய்யும் மணமகனிற்கு மணமகள் தேவை.

**தரகர் தேவையில்லை**

தொடர்பு: **077 615 1700**

# அபிவிருத்திகளைவிட உரிமைகளே அவசியம்

## குகதாசன் எம்.பி. தெரிவிப்பு

**கிளிநொச்சி, செப்.10**
**தமிழ் மக்களுக்கு அபிவிருத்திகளைவிடவும் உரிமைகளைப் பெறுவதே பிரதானம். இதற்காக ஒற்றுமையாக நாம் செயற்படவேண்டும் -இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
தற்போது வேட்பாளர்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை உள்ளடக்கி தமது பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
மறுபுறத்தில் தமிழ் மக்களுடைய தனிநபர் விவசாயக் காணிகள் பங்குபோடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
தமிழ் மக்களுடைய காணிகளை அடாத்தாக பிடித்து வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், துறைமுக அதிகார சபை என்பன கபளீகரம் செய்கின்றன. இதனை மீட்க அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.
அபிவிருத்திகளை விடவும் உரிமைகளைப் பெற முயற்சிப்போம்- என்றார். (ச)

# பரிசில் நாள்

யாழ்ப்பாணம், செப். 10
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி மூத்த பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. யமுனா இராஜசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-66)


# Invitation for Bids (IFB)
## Ministry of Agriculture &Agrarian Service, Animal Husbandry, Irrigation, Fisheries, Water Supply and Environment - Northern Province.
## Security Service, Cleaning Service 2024/2025

1. The Chairman Procurement Committee of the Ministry of Agriculture (MPC - Major) on behalf of the Ministry of Agriculture - Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for Security Service & Cleaning Service for Ministry of Agriculture – Northern Province."
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
4. To be eligible for entering into an agreement and to become the contract effective the bidder shall meet following requirement.
   a. Shall have its registered office or branch in Northern Province
5. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria given in Section 2 -Bidding Data.
6. Interested bidders may obtain further information from **Ministry of Agriculture - Northern Province. Palaly Road, Thirunelvely, Jaffna.** and inspect the bidding documents at Ministry of Agriculture 9.00 hrs to 15.00 hrs on working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Ministry of Agriculture - NP, from 10th September 2024 to 30th September 2024 from 09.00 hrs to 15.00 hrs upon payment of a non-refundable fees should be made as given in the table. The method of payment will be cash.
8. Bids shall be delivered to Ministry of Agriculture - Northern Province. Palaly Road, Thirunelvely Jaffna.on or before the closing time 14.00 hrs of 01st October 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid-Security as per the information given in the table.
10. Pre- bid meeting will be held on 20th September 2024 at 14.00hrs. in the Ministry of Agriculture Northern Province, Palaly Road Thirunelvely, Jaffna. Interested bidders may attend the meeting at their own expense.

| No | Description | Contract Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity | Bid Validity Date | Non Refundable Fees |
|---|---|---|---|---|---|---|
| 1 | Security Service | 1 Year | 436,250.00 | 26.01.2025 | 29.12.2024 | 3,500.00 |
| 2 | Cleaning Service | 1Year | 76,600.00 | 26.01.2025 | 29.12.2024 | 2,000.00 |

Mariyathasan Jegu
Chairman, Procurement Committee,
Ministry of Agriculture - Northern Province.
Palaly Road Thirunelvely,
TP.No: 021-221 7304

Date : 10.09.2024

(CR/43181) J-1


# தமிழரசின் முடிவு வலுவானதே!

## சி.வீ.கே. சிவஞானம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.10
சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என எடுத்த தீர்மானம் முறைப்படி எடுக்கப்பட்டதே எனத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடமாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக மீண்டும் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய தேவை இல்லை. கூட்டம் நடைபெற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கட்சி தீர்மானம் உரிய கோரத்துடன் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது. எனவே அந்தத் தீர்மானம் வலுவானதே. எடுத்த தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்றால் அதனைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அதனை அவர்கள் சொல்லலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்தின் ஏக விநியோகஸ்தருக்கு வாகனத்தில் விநியோகம் செய்ய உதவியாளர்கள் தேவை

தொடர்பு: 077 911 5408
077 990 0525

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில்
**இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
தரகர் தேவையில்லை.
077 195 2604
whatsapp:- +164 7769 3057

(CS/56159) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 04 . 1974



மறைவு
07 . 09 . 2024

## திருமதி உதயகுமாரி தயாரூபன் (அமுதா)

இல. 292, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமதி உதயகுமாரி தயாரூபன் (அமுதா) அவர்கள் கடந்த (07.09.2024) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - தனபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஈஸ்வரானந்தன் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், தயாரூபன் (பிரதேச செயலாளர் - பிரதேச செயலகம் , கரவெட்டி) அவர்களின் பாசமிகு மனைவியும், அபிலாஷ், அபினாஷ் (மாணவர்கள் சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரன் அன்புத் தாயாரும், உதயகுமார் (பிரான்ஸ்), உதயசங்கர் (ஜேர்மனி), உதயராணி (டென்மார்க்), உதயசூரியன் (பிரான்ஸ்), உதயராஜ் (பிரான்ஸ்), உதயஸ்ரீ (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீரஞ்சினி, விஜயதேவி, சிங்கராஜா, ரம்யா, கலைவாணி, கல்பனா, அமரர் தயாநிதி, தயாபரன், தயாளன் (M.S.O.கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும், சிவரூபனா, யசோதா (முன்பள்ளி ஆசிரியை பிரதேசசபை - கரவெட்டி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், சசிசா, வினோத் ஆகியோரின் சிறியதாயாரும், நிதர்சனன், நிதர்சிகா, நிரூபன், கம்சத்வனி, கரிஸ்மேனன் ஆகியோரின் ஆசையம்மாவும், விக்னேஷ், கல்கி, துருபன், சமந்தா, ஸ்டிவ், அட்சயா, டினேஷ், டிஷான், அங்கஜன், ஆதிஷன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 07.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானத்திற்கு முற்பகல் 11.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 399 9430 - கணவன்**

**இல. 292, கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

(CS/56160) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 03 . 1957



மறைவு
08 . 09 . 2024

## ஆசைப்பிள்ளை ஜீவநாதன்

(ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் யாழ் மாநகரசபை)

இல.10 வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை ஜீவநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - கமலபூரணம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற டைனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிரோஜன் மற்றும் சோபின்ஜா (சட்டக்கல்லூரி மாணவி), கௌசன்யா (BOC உத்தியோகத்தர்), பானுஜா (கனடா), சிறிகஜன் (துபாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சந்திரநாதன், ஜெகநாதன், மஞ்சுளா மற்றும் ரகுநாதன், நேமிநாதன் ஆகியோரின் சகோதரனும், சாமுவல் தேவகுமாரன் ஜீவானந்தம், தவராஜா சுவாஸ்கர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 408 6190**

**இல. 10, வைரவர் கோவில் வீதி,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

(CS/56157) J-1

# மரண அறிவித்தல்

## கனகசபாபதி நமநாதன்



தோற்றம்
**28.06.1938**

மறைவு
**08.09.2024**

யாழ் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி நமநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி (முன்னாள் காணி குடியேற்ற அதிகாரி, பிரபல சட்டத்தரணி) - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பதேவி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு (Canada), காசிநாதன் (Colombo) (சாயி சங்கீதா), தெய்வநாயகி (London), செலல்வராணி (switzerland), ஜெயராணி (Hattion) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமயோகம், சகுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான னுச. குலசேகரம், விநாயகேந்திரன், மற்றும் Dr. ராஜரட்ணம் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம், யமுனாதேவி மற்றும் சிறிதேவி, நித்தியானந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**காசிநாதன் - 077 613 6124 (கொழும்பு)**
**ஜெயராணி - 071 828 6613 (ஹட்டன்)**

(CS/56182) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டுத்தீயால் அவசர நிலை

பொலிவியாவில் பல இடங்களில் அதி விரைவாகப் பரவிவரும் காட்டுத் தீ காரணமாக, அங்கு தேசிய ரீதியிலான அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 3 மில்லியன் ஹெக்ரேயர் காடுகள் இதுவரை அழிந்துள்ளன. (ம)


## இம்ரானுக்கு ஆதரவாகப் பேரணி

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள, பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், தடை செய்யப்பட்ட தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கானை விடுவிக்குமாறு வலியுறுத்தி போராட்டங்கள் ஆரம்பித்துள்ளன. (ம)


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 02 . 1942

மறைவு 09 . 09 . 2024



### பரமசாமி மகேஸ்வரி (பொன்னான்)

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட பரமசாமி மகேஸ்வரி நேற்று (09.09.2024) திங்கட்கிழமை பிரான்சில் காலமானார்.


அன்னார் பரமசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் - இரத்தினம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தவராசா மற்றும் செல்வராசா, பகவதி, பத்மராசா, மஹாதேவன், ரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மட்டுவில் வடக்கு, மட்டுவில்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தம்பையா கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஆங்கில இலக்கிய ஆசிரியர்)

தென்புலோலி புற்றாளையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பையா கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் தணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஆங்கில இலக்கிய ஆசிரியர்) அவர்கள் நேற்று (09.09.2024) திங்கட்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கதிர்காமநாதன் பரமேஸ்வரியின் (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம் - பருத்தித்துறை) அன்புக் கணவரும், சரஸ்வதி, கமலாவதி, சிதம்பரநாதன், இராமநாதன், பத்மாவதி, திலகவதி, புனிதவதி, புஸ்பவதி, சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, சகுந்தலை, சிவபாக்கியம், கனேந்திரன், கனகலிங்கம், கனேஸ்வரி ஆகியோரன் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்பு மனைவி
கதிர்காமநாதன் பரமேஸ்வரி.

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 08 . 1973

மறைவு 09 . 09 . 2024



### கந்தப்பு விமலதாஸ்

(உரிமையாளர்-கவிதாஸ் ஸ்ரோர்ஸ் பூண்டுலோயா-நுவரெலியா)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு விமலதாஸ் அவர்கள் நேற்று (09.09.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு மற்றும் விமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் தனபாலதேவி தம்பதியரின் மருமகனும், கமலியின் அன்புக் கணவரும், லவினா, கௌரிஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயதாஸ், சுவர்ணதாஸ் (சுவிஸ்), காலஞ்சென்ற கவிதாஸ், மனோபா, கீதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகிதராஜா (கனடா), லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), வாசுகி, சுரேஸ்குமார் (ஐயப்பன்), யாழினி (கனடா), கவிதா (பிரான்ஸ்), ஐங்கரன் (கொழும்பு), சசிகலா, சோபா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

ஏழாலை கிழக்கு
ஏழாலை.

ம.சுரேஸ் (மச்சான்) - 077 201 9820
க. விஜயதாஸ் (சகோதரன்) - 077 623 9558

(CS 1317) V-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உருவாய் 20 . 08 . 1998

அருவாய் 23 . 08 . 2023



### அமரர் முருகேஸ் முரளிகாந் (காந்தன்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS1318) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சதாசகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா நிறைவு!

யாழ்ப்பாணம், செப். 10

துன்னாலை வடக்கு சதாசகாய மாதா ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

திருவிழா வழிபாடுகளைத் தொடர்ந்து, திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது. பலநூறு மக்கள் பக்திப்பூர்வமாக வழிபாடுகளில் கலந்துகொண்டனர். (ம-100)

# அண்ணன் தம்பி ஜோடி அரசியல் ஜோடியாகியதாம்

### ரணில் – அநுரவை போட்டுத்தாக்குகிறார் சஜித்

நாட்டைத் தோல்வி அடையச் செய்கின்ற, நாட்டைச் சீரழிக்கின்ற, நாட்டை கொளுத்துகின்ற ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் அண்ணன் தம்பி ஜோடி, அரசியல் ஜோடியாக மாறி இருக்கிறது. என்னைத் தோல்வி அடையச் செய்வதே அவர்களுடைய நோக்கம். அவர்கள் அவர்களுக்குள்ளே இரண்டாவது விருப்பு வாக்கை பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது விருப்பு வாக்குத் தேவையில்லை. முதலாவது சுற்றிலே ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஜனாதிபதித் தேர்தலிலே களம் இறங்கி இருக்கின்றார். ஆனாலும் அவருக்கு கடவுச்சீட்டுகளையும் விசாக்களையும் வழங்க முடியாதுள்ளது. இவர்களால் நாட்டின் பிரச்சினையை தீர்க்க முடியாது. கடவுச்சீட்டுக்கும் விசாவுக்கும் வரிசை காணப்படுகின்றது. ஒன்றிணைந்த ஆடை உற்பத்தியாளர் சங்கம் கூறுவதைப் போன்று கொள்வனவாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், தொழில்நுட்ப சேவை வழங்குனர்களுக்கும் எமது நாட்டுக்கு வருவதற்கு விசாக்களை வழங்க முடியாது போயுள்ளது. இது எமது நாட்டுக்கு தாக்கத்தை செலுத்தும். சுற்றுலாத் துறையும் இதனால் வீழ்ச்சி அடையும். அநுரவுடன் திருட்டுத்தனமாக டீல் செய்வதை விட்டுவிட்டு விசாக்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இவர்கள் நாட்டை பொறுப்பேற்றால் நாட்டுக்கும் பிணையும் இல்லாமல் போகும். ரணில் – அநுர சூழ்ச்சியை தோல்வி அடையச் செய்ய வேண்டும் –என்றார். (ஒ-இ)

### உடுப்பிட்டியில் விபத்து:

# ஜேர்மனியிலிருந்து திரும்பியவர் பலி!

### மனைவி படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 10

உடுப்பிட்டியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

செல்வராஜா சிவஞானம் (வயது74) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஜேர்மனியில் இருந்து தாயகம் திரும்பிய மேற்படி நபரும், அவருடைய மனைவியும் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதில் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் இருவரும் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் செல்வராஜா சிவஞானம் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். மனைவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-100)

Airport & Aviation Services (Sri Lanka)(Private) Limited

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி வீடுகள் / கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்கும்பொருட்டு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் / கட்டடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. பலாலி விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் பலாலி விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பலாலி / காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை / உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்களுடன் இருத்தல் வேண்டும்.
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்.
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்.
06. அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகளையும் உரிமையாளரே மேற்கொள்ள வேண்டும்.
07. வீட்டின் வெளிப்புறத்தை சுத்தம் செய்வது உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்காக பொருத்தமான அணுகுமுறையொன்றினை ஏற்படுத்தி பராமரிக்கப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டடங்கள் முதலாவதாக 06 மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணிங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வீடுகள் / கட்டடங்கள் தொடர்பான முழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) | வீட்டு /கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | பலாலி விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) ப |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | அனைத்துவித வீட்டுத்தள ாடங்கள் (உண்டு / இல்லை) |
| 8) | வீட்டின் பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.

03. வீட்டின் / கட்டடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.

04. வீட்டின் / கட்டடத்தின் புகைப்படங்கள்.

05. எதிர்பார்க்கப்படும் மாத வாடகை.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வீடுகள் / கட்டடங்களை வாடகைக்குப் பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு "தவிசாளர், திணைக்கள பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி கட்டுநாயக்கவிற்கு 2024 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 112263550/ 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்

தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி.
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,
கட்டுநாயக்க.

# வெப்பத்தில் சிக்கி தவிக்கின்றது சீனா

பீஜிங், செப்.10

1961ஆம் ஆண்டுக்குப் பின்னர் சீனா தனது வெப்பமான ஓகஸ்ட் மாதத்தை இந்த ஆண்டு பதிவு செய்துள்ளது என்று அந்தநாட்டுத் தேசிய வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு சீனாவின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் கடுமையான வானிலை, வெப்ப அலைகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டன.

கரியமில வாயுவை வெளியேற்றுவதில் சீனா முன்னணியில் உள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனால், உலகளாவிய பருவநிலை மாற்றம், தீவிர வானிலை நிகழ்வுகள், இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன என்று கூறப்படுகின்றன.

இந்தநிலையில், இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் சீனா நீடித்த, அதிக வெப்பநிலையை அனுபவித்தது என அந்தநாட்டு வானிலைத்துறை நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

ஓகஸ்ட் மாதத்தில் தேசிய சராசரி வெப்பநிலை 22.6 டிகிரி செல்ஸியசாகப் பதிவானது. இது சராசரியாக ஓகஸ்ட் மாதத்தில் பதிவாகும் வெப்பநிலையைவிட 1.5 டிகிரி செல்ஸியஸ் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# 'யுக்திய' கைது 652

கொழும்பு, செப்.10

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின்போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 652 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 9 பெண்கள் அடங்குகின்றனர். சந்தேகநபர்களிடமிருந்து 119 கிராம் ஹெரோய்ன், 262 கிராம் ஐஸ், 179 கிலோ கஞ்சா முதலான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச)

# பாலியல் குற்றச்சாட்டால் அமைச்சுப் பதவி பறிப்பு!

லண்டன், செப்.10

பாலியல் குற்றச்சாட்டுக்கு இலக்கான மனித உரிமைகள் அமைச்சர் சில்வியோ அல்மெய்டா மற்றுமொரு அமைச்சரை பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா பதவி நீக்கம் செய்துள்ளார்.

'பாலியல் குற்றச்சாட்டுகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அமைச்சரைப் பதவியில் வைத்திருப்பது நிலையானது அல்ல என ஜனாதிபதி கருதுகிறார்' என்று லூலாவின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் சமூகச் செயற்பாட்டாளரான அல்மெய்டா இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோது, விசாரணைக்கு சுதந்திரம் வழங்குவதற்காக என்னைப் பதவி நீக்கவேண்டும் என்று ஜனாதிபதி லூலாவிடம் கேட்டுக்கொண்டேன் என்று தெரிவித்தார்.

அதேவேளை, பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்த பெண்களில் ஒருவர், இன சமத்துவ அமைச்சர் அனியேல் பிராங்கோ என அந்த நாட்டு உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது. இதன்போது மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் அடியவர்கள் புடைசூழத் துர்க்காதேவி வெளிவீதியில் பவனி வந்தார். (ம-66)

# எஸ்.பி.ஓ.களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 10

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக மூத்த தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வில் மூத்த தலைமை தாங்கும் அலுவலகர்களாக நியமிக்கப்படவுள்ள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ஒ-66)

## பொறுப்புக்...

நல்லிணக்க முயற்சிகளை வலுப்படுத்தல் ஆகியவற்றுக்காக 2022 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் இரண்டு வருட அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அவகாசம் கடந்த மாதத்துடன் நிறைவுக்கு வந்த நிலையில், நேற்று ஆரம்பித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே, இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பிலும் இதர விடயங்கள் தொடர்பிலும் சர்வதேசத்தால் கனதியாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஐரோப்பிய ஒன்றியம்**

இலங்கையில் பொறுப்புக்கூறல் இன்மை தொடர்பில் தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. கடந்த சில வருடங்களாக இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம், அந்த நெருக்கடிகளால் பொறுப்புக்கூறல் பாதிக்கப்படக்கூடாது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை - ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நோர்டிக் நாடுகள் சார்பில் உரையாற்றிய பின்லாந்து, "பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காகவும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவும் இலங்கை உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளது.

**அமெரிக்கா**

இலங்கையின் பொருளாதார மீட்சியை வரவேற்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்கின்றன. அத்துடன் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டுவரும் தண்டனை விலக்குப் போக்குக்கு இன்னமும் முடிவு காணப்படவில்லை. தண்டனை விலக்களிக்கப்படுதல் நல்லிணக்கத்துக்குப் பெரும் தடையாகக் காணப்படுகின்றது. பொறுப்புக்கூறலுக்காக அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறைக்கு அமெரிக்கா அழைப்பு விடுகின்றது என்றும் அமெரிக்கப் பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார்.

**கனடா**

இதேவேளை - இலங்கையில் பொறுப்புக்கூறலை மீள வலியுறுத்தியுள்ள கனடா, கண்மூடித்தனமான கைதுகளுக்கு வழிவகுக்கும், சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டங்கள் குறித்து கரிசனை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## தீர்மானங்களை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஜெனிவாவில் நேற்று ஆரம்பித்துள்ளது. இதன்போது உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிராகரிப்பதாக அறிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் வெளிப்புற ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறையையும் நாம் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம்.

இலங்கையின் சம்மதம் இன்றியும், பங்கெடுப்பின்றியும் அவை நிறைவேற்றப்பட்டமையால் அவற்றை நிராகரிக்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது. இலங்கை பல தசாப்தகால மோதல்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் இலங்கையின் பிரதிநிதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தினோம் இடம்பெயர்ந்தவர்களை மீளவும் குடியேற்றினோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## அங்கஜனின்...

நிலையில் அதை இளைஞர் குழுவினர் சிலர் நேற்று மாலை உடைத்துள்ளனர். மேற்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மனைவி பங்கேற்கும் பரப்புரைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் தந்தையார் இராமநாதனின் சகோதரரான ராஜனே ஒழுங்கு செய்துள்ளார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து நேற்றையதினம் மேற்படி மைதானம் திடீரென இரண்டு பூட்டுக்கள் போட்டு பூட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரண்டு தரப்பினரையும் நெல்லியடிப் பொலிஸார் அழைத்து கலந்துரையாடினர். மைதானத்தைத் திறந்து விடுமாறு அறிவுறுத்தப்பட்டபோதும், நேற்று மாலை வரையில் மைதானம் திறக்கப்படாத நிலையில் அதன் பின்னர் பூட்டு உடைக்கப்பட்டு, பிரசாரக் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்டன. (அ-ஒ-26)

## சஜித்தின்...

நேற்று இடம்பெற்ற மக்கள் வெற்றிப் பேரணியில் சஜித்துடன் மேடையேறி கீதா குமாரசிங்க தனது ஆதரவை வெளிப்படுத்தினார். (அ-ஒ-இ)

## சிவில்...

சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தை அதிகரிக்கும் நிலத்தகராறு குறித்தும் பிரிட்டன் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளதுடன், மனித உரிமை பேரவையுடன் இலங்கை மீண்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (அ-ம)

## அடி காயங்களுடன்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றின் அருகாமையிலிருந்தே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் அடிகாயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் கட்டுமானத்தில் இரத்தக் கறைகளும் காணப்படுகின்றன.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று தடயவியல் விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-ம-26-27-66-20)

## சட்டத்தரணி...

பட்டவராவார். திடீர் இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மஹிந்த...

எனவே பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு கோரியுள்ளோம் என பொதுஜன பெரமுனவின் பிரதிநிதியான ரேணுக பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் பிரதிநிதிகளுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ள நிலையில் அவருக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ச பாதுகாப்புத் தரப்புக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவுறுத்தியுள்ளார்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களில் நாமல் ராஜபக்ச முன்னிலையில் உள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மீது பெரும்பான்மை மக்கள் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளார்கள். இந்தத் தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் பலமான அரசாங்கத்தை உருவாக்குவோம்" - என்றார். (அ-ஒ-இ)

## தேர்தல்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வடக்கு மாகாணத்தின் கள நிலவரங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என ஆளுநர் இதன்போது கூறினார்.

அமைதியான முறையில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த ஆளுநர், மக்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினரிடம் தெளிவுபடுத்தினார். (அ-ஒ-27)

## சகல...

இதனையடுத்து, அனைத்துப் பாடசாலைகளும் வழமை போன்று எதிர்வரும் 23ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும். வாக்கெடுப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 18ஆம் திகதி பாடசாலை முடிவடையும் நேரத்துக்குப் பின்னர் கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் விபத்து குடும்பப்பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், செப். 10

வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார்சைக்கிள் மோதியதில் படுகாயங்களுக்கு உள்ளான குடும்பப் பெண் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

தும்பளை மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த பிறேமளா கேசவதாஸ் (வயது -56) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 5ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு அருகாக இடம்பெற்ற விபத்திலேயே அந்தப் பெண் படுகாயமடைந்திருந்தார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, மீண்டும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே நேற்றுக் காலை அவர் உயிரிழந்துள்ளார். பருத்தித்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறைப் போக்குவரத்து பொலிஸார் நெறிப்படுத்தினார்கள்.

(ம-100)

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணத்தில் வீட்டு கிணற்றடியில் குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த செல்வராசா கார்த்தீபன் (வயது -35) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 5.30 மணி அளவில் தோட்டத்துக்குச் சென்று தோட்ட வேலையை செய்துவிட்டு 9.30 மணி அளவில் வீட்டுக்கு வந்து குளிப்பதற்காக கிணற்றடிக்கு சென்றுள்ளார்.

குளிப்பதற்குச் சென்ற கணவன் நீண்ட நேரமாக திரும்பி வராத காரணத்தால் மனைவி கிணற்றடிக்கு சென்று பார்வையிட்டவேளை கணவன் நிலத்தில் விழுந்த நிலையில் அசைவற்று காணப்பட்டார்.

அவரை மீட்டு தெல்லிப்பழை ஆதர மருத்துவமனைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(ஒ-27)

### காணி, வீடு விற்பனைக்கு உண்டு

கோப்பாய் தெற்கு கிராம சபை ஒழுங்கையில் கிராம சேவையாளர் பிரிவு J/260 நில. பர. 3 குளி 8.50 அளவுள்ள **காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.**

தரகர் தேவையில்லை.

077 967 2152, 077 902 4248

(CS31161) J-1

### காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 66 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

**பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தொடர்பு : 077 623 4204, 077 030 2523

### வேலைவாய்ப்பு!

1. Graphic Designer
கிராபிக் டிசைனர்
2. Tamil Type Setter

முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

SALARY 30,000/- to 50,000/-

புதன்கிழமை (11.09.2024) காலை 10.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நேர்முக தேர்வு நடைபெறும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

ANDRA PRINTERS
379, Kasthuriyar Road,
Jaffna.
0776622981 | 0777481696

### வேலையாட்கள் தேவை

நெடுந்தீவில் உள்ள பேக்கரி ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள (ஆண்) பேக்கரி வேலை தெரிந்த ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் அவசியம்**

தொடர்பு: 077 233 5950

### உடனடி வேலைவாய்ப்பு

15 வருட கனடா நிறுவனத்தின் யாழ் நகரில் இயங்கிவரும் **Customer Care** பிரிவிற்கு முழுநேர வேலையாட்கள் தேவை!

Maxron Tech
Ariyakulam, Jaffna.
Send us your CV on Whatsapp

076 376 7070

(CS36156) J-1

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 05 . 1936



இறப்பு 02 . 09 . 2022

**அரியரத்தினம் செல்வரத்தினம்**

*திதி: ஆவணித்திங்கள் வளர்பிறை ஸப்தமி (10.09.2024)*

அப்பா நீங்கள் ஆவணித் திங்கள் வளர்பிறை ஸப்தமி திதியில்
எமைவிட்டுப் பிரிந்து விண்ணுலகம் சென்றுவிட்டீர்கள்.
கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டாண்டுகள் சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*என்றும் உங்கள் நினைவுகளுடன்...*

ஜெகதீஸ்வரன் - 0033 660 81 6705
ஜெயானந்தன் - 077 633 9468

மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 09.07.1944 உதிர்வு : 23.08.2023

**அமரர் கார்த்திகேசு குணபாக்கியவதி**

திதி: ஸப்தமி

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம்
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

சிற்றம்பலம் வீதி,
உசன் மிருசுவில்.

என்றென்றும் உங்கள் நினைவில்
**குடும்பத்தினர்.**

(CS 56164) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.